நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி.சி 16/2018

2018ம் ஆண்டு ஜூலை திங்கள் 17ம் நாள் செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.1 வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | மகேந்திரன் | வயது: | 45 |
| த/பெ.(அ)க.பெ: | குப்பன் | தொழில்: | விவசாயம் |
| ஊர் | : ஐயங்கொல்லி | சமயம்: | இந்து |
| வட்டம் | : திருப்பத்தூர் | சாதி: | |
| மாவட்டம் | : வேலூர் | | |

முதல் விசாரணை:-

நான் ஐயங்கொல்லி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். வழக்கின் எதிரிகளை தெரியும் அவர்கள் பக்கத்து நிலத்துக்காரர்கள். சுமார் 1 ஆண்டிற்கு முன்பு எனக்கு தேதி நினைவில்லை. மாலை சுமார் 5 மணிக்கு எனது அம்மா முனியம்மா மற்றும் எனது அண்ணன் பாப்பாண்ணன் இருவரும் ஐயங்கொல்லையில் உள்ள நிலத்தை உழுவதற்காக டிராக்டர் கொண்டு சென்று உழுதார்கள். ஆஜர் எதிரிகள் அந்த டிராக்டரை தடுத்து ஓட்ட கூடாது என சொல்லி அதன் சாவியை பிடிங்கி கல் எடுத்து டிராக்டர் மீது வீசினார்கள். எனக்கு எனது அண்ணன் மகன்கள் எனக்கு போன் மூலம் நேரிலும் வந்து தகவல் சொன்னார்கள். ஆஜர் எதிரியும் எங்களது நிலத்தை உழவு செய்யவிடாமல் தடுப்பதாக சொன்னதன் பேரில் நான் அந்த இடத்திற்கு சென்று முதல் எதரியிடம் சென்று எதற்காக ஏர் உழவு செய்ய விடாமல் தடுக்கிறாய், நாம் ஒன்றும் அண்ணன், தம்பியும் இல்லை நமக்குள் பாகப்பிரச்சனை ஏற்படவும் இல்லை என்று கேட்டேன். எனது பெரிய அண்ணன் என்னையும் எதிரிகளையும் சமதானப்படுத்தி ஊரில் பெரியவர்களை வைத்து பேசி கொள்ளலாம் என கூறி என்னை அழைத்து சென்று விட்டார். நான் ஐயங்கொல்லையிலே எனது அம்மா வீட்டில் தங்கி இருந்தேன். அன்றைய தினமே இரவ சுமார் 8 மணிக்கு ஆஜர் எதிரிகள் அடியாட்களை அழைத்து கொண்டு எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். என்னை பார்த்து உங்ககொத்தா, தேவிடியா பையா, பொட்ட பையா வெளியே வாடா என்று அசிங்கமான வார்த்தைகளால் அழைத்தார்கள். நான் சத்தம் கேட்டு வெளியில் எட்டி பார்த்தேன். அதற்குள் வீட்டிற்குள் வந்து தூக்கி கொண்டு வெளியே சென்று எனதுகை கால்களை பிடித்து தலை மீதும் கண்ணத்தின் மீதும் தாக்கினார்கள். என்னை 2ம் எதிரி, 3ம் எதிரி ஆகியோர்களுடன் வெளியில் வந்த சிலரும் என்னை வெளியே தூக்கி சென்றார்கள். என்னுடைய வலது தாடையின் மீது கட்டையால் தாக்கி ரத்த

காயம் ஏற்படுத்தினார்கள். எனக்கு பற்களுக்கு கீழ் உள்ள எலும்பில் முறிவு ஏற்பட்டு அதற்கு அறுவை சிகிச்சை செய்த பிளேட் பொறுத்தியிருக்கிறார்கள். எனது நிறைய ரத்தம் வழிந்தது. எனது அண்ணன் மகன் உதயகுமாரும், எனது அண்ணனும் சேர்ந்து திருப்பத்துார் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தார்கள். முதல் எதிரியின் மனைவி சிவகாமியும் சம்பவ இடத்திற்கு வந்திருந்தார். முருகன் கட்டையால் அடித்தார். சிவராஜ் செங்கல்லால் முதுகின் மீது அடித்தார். பிரபு, முருகேசன், சேர்ந்து மொத்தம் தெரிந்த நபர்கள் நான்கு பேரும் மற்றும் எனக்கு அடையாளம் தெரியாத முன்று பேரும் வந்தார்கள். மறுநாள் காலை போலீஸார் என்னை மருத்துவமனை வந்து விசரித்தார்கள். நடந்த விவரத்தை சொன்னேன. எழுதி கொண்டார்கள். அதில் நான் கைரேகை செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமுலம் நான் சொன்னது தான். அநத புகார் வாக்குமுலம் அ.த.சா.ஆ 1 ஆகும். எதிரிகள் சம்பவத்தின் போது என்னை அடிக்க பயன்படுத்திய கட்டை, கல்லை பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் கட்டைகள் இரண்டும், செங்கல் துண்டும் எதிரிகள் என்னை அடிக்க பயன்படுத்தியதுதான். சுமார் 2 அடி நீளமுள்ள விறகு கட்டைகள் சா.பொ. 1 மற்றும் 2 ஆகும். செங்கல்துண்டு சா.பொ. 3 ஆகும். திருப்பத்துார் அரசு மருத்துவமனையில் எனக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக சென்னை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். எனக்கு அங்கே ஸ்கேன் செய்து பார்த்து விட்டு அரசு பல் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கே எனக்கு அறுவை சிகிச்சை செய்து பிளேட் பொறுத்தி சிகிச்சை அளித்தார்கள். நான் சென்னையில் 15 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். இது சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:- இல்லை.

நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி.சி 16/2018

2018ம் ஆண்டு ஜூலை திங்கள் 17ம் நாள் செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.2 வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ராஜா | வயது: | 31 |
| த/பெ.(அ)க.பெ: | வெள்ளைங்கிரி | தொழில்: | பானிபூரி |
| ஊர் | : ஆண்டியப்பனூர் | சமயம்: | இந்து |
| வட்டம் | : திருப்பத்தூர் | சாதி: | |
| மாவட்டம் | : வேலூர் | | |

முதல் விசாரணை:-

நான் ஆண்டியப்பனூர், ஐயங்கொல்லி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தஞ்சாவூரில் பானி பூரி கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா. 1 எனது சித்தப்பா. வழக்கின் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது பக்கத்து நிலத்துக்காரர். சுமார் 1 வருடம், இரண்டு மாதம் ஆகியிருக்கும் மாலை சுமார் 5 மணிக்கு எனது சித்தப்பா பாப்பண்ணன், எனது பாட்டி முனியம்மா ஆகியோர் டிராக்டரை எடுத்து சென்று நிலத்தில் ஏறு உழுதார்கள். வழக்கின் எதிரிகள் நிலத்திற்கு வந்து டிராக்டர் ஓட்ட விடாமல் தடுத்தார்கள். டிராக்டர் ஓட்டும் நபரை திருப்பி அனுப்பி விட்டார்கள். அந்த நிலம் அ.சா.1 க்கு பாத்தியப்பட்டது என்பதால் நாங்க்ள அவருக்கு தகவல் கொடுத்து எங்களுடைய நிலத்தை ஓட்டவிடாமல் தடுக்கிறார்கள் என்று சொல்லி அவருக்கு தகவல் சொன்னோம். அ.சா. 1 முதல் எதிரியிடம் சென்று ஏன் எனது நிலத்தை ஓட்ட விடாமல் தடுக்கிறாய் என்று கேட்டார் அப்போது நானும் உடன் இருந்தேன். அதன் பிறகு அ.சா.1 ஊர்காரர்களை வைத்து காலையில் பேசி கொள்வதாக சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டார். நானும் வந்து விட்டேன். அன்றைய தினமே இரவு 8 மணிக்கு 2, 3 ம் எதிரிகள் கட்டையை கொண்டு வந்து அ.சா.1 ஐ இழுத்து கட்டையால் தாக்கினார்கள். 4, 5 வெளியூர் நபர்களையம் அழைத்து வந்தார்கள். நான் எதிரிகள் மணி, சிவராஜ், முருகேசன் ஆகியோர்களிடம் வெளியூர்காரர்களை அழைத்து வந்து ஏன் அடிக்கிறீர்கள் என கேட்டேன். அப்போது 2ம் எதிரி ஒரு செங்கல்லால் எனது இடது கண் புருவத்தில் தாக்கினார். இடது புற தலையின் மீதும் செங்கல்லால் தாக்கினார். 3ம் எதிரி வலது தோள்பட்டையின் மீது கட்டையால்தாக்கினார். அ.சா. 1 ஐ தாக்கியதில் அவருக்கு ரத்தம் வழிந்தது. பற்கள் உடைந்து வெளியே வந்தது. அ.சா.1 ஐ உதயகுமாரும்,பெரியண்ணன் ஆகிய இருவரும் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு வந்து சேர்த்தார்கள். என்னையும் எனது மனைவி

திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தார். போலீஸார் என்னை மருத்தவமனையில் வந்து விசாரித்தார்கள். நான் மருத்துவமனையில் 5 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன்.

எ.த.கு.வி:- இல்லை.

நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி.சி 16/2018

2018ம் ஆண்டு ஜூலை திங்கள் 17ம் நாள் செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.3 வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

பெயர்: பாப்பண்ணன் வயது: 70

த/பெ.(அ)க.பெ: குப்புலு தொழில்: விவசாயம்

ஊர் : ஐயங்கொல்லி சமயம்: இந்து

வட்டம் : திருப்பத்தூர் சாதி:

மாவட்டம் : வேலூர்

முதல் விசாரணை:-

நான் ஐயங்கொல்லி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா. 1எனது தம்பி. அ.சா.2 எனது அண்ணன் மகன். வழக்கின் எதிரிகளை தெரியும். சுமார் ஒரு ஆண்டிற்கு முன்பு மாலை சுமார் 5 மணிக்கு நானும், டிராக்டர் வைத்து அ.சா.1 ன் நிலத்தை ஏர் ஓட்டி கொண்டிருந்ததேன். முதல் எதிரியும், அவரது மனைவியும், என்னை அடிப்பதற்காக ஓடி வந்தார்கள். பருத்தி மண்டை குச்சிகளை நான் ஏர் ஓட்டி கொண்டிருந்த சமயத்தில் நிலத்தின் ஓரத்தில் போட்டு கொண்டிருந்தேன். டிராக்டரை ஓட்ட விடாமல் தடுத்தார்கள். டிராக்டரின் மீது கல்லை எடுத்து வீசினார்கள். அப்போது எதிரி முருகன் சாவியை பிடிங்கி கொண்டார். சாட்சி முருகன் என நீதிமன்றத்தில் ஆஜரான 2ம் எதிரி முருகேசன் என்பவரை அடையளாம் காட்டி குறிப்பிட்டார். டிராக்டர் ஓட்டிய நபர் நான் லட்சக்கணக்கில் பணம் போட்டு முதலீடு செய்துள்ளேன். அவர்கள் டிராக்டரை தாக்குகிறார்கள். எனவே என்னால் ஏர் ஓட்ட முடியாது என்று சொல்லி அங்கிருந்து கிளம்பி விட்டார். நான் அ.சா. 1 மகேந்திரனுக்கு தகவல் சொல்லி வரச்சொன்னேன். எனது அண்ணன் மகன் அ.சா.1 ஐ அழைத்துவந்தார். அ.சா.1 ஆஜர் எதிரியிடம் ஏதோ கேட்டு இருக்கிறார் அதன் பிறகு எனது அண்ணன் சமதானம் பேசி வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டார். அதன் பிறகு ஆஜர் எதிரிகள் வெளியில் இருந்து ஆட்களை அழைத்து வந்து வீட்டிலிருந்த அ.சா.1 ஐ கட்டையால் தாக்கினார்கள். அ.சா. 1க்கு தாடையில் எலும்பு உடைந்து விட்டது.அவர் சட்டை முழுவதும் ரத்தம் வழிந்தது. போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:- இல்லை.

நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

<u>சி.சி 16/2018</u>

2018ம் ஆண்டு ஜூலை திங்கள் 17ம் நாள் செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.1 வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | மகேந்திரன் | வயது: | 45 |
| த/பெ.(அ)க.பெ: | குப்பன் | தொழில்: | விவசாயம் |
| ஊர் | : ஐயங்கொல்லி | சமயம்: | இந்து |
| வட்டம் | : திருப்பத்தூர் | சாதி: | |
| மாவட்டம் | : வேலூர் | | |

முதல் விசாரணை:-

நான் ஐயங்கொல்லி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். வழக்கின் எதிரிகளை தெரியும் அவர்கள் பக்கத்து நிலத்துக்காரர்கள். சுமார் 1 ஆண்டிற்கு முன்பு எனக்கு தேதி நினைவில்லை. மாலை சுமார் 5 மணிக்கு எனது அம்மா முனியம்மா மற்றும் எனது அண்ணன் பாப்பாண்ணன் இருவரும் ஐயங்கொல்லையில் உள்ள நிலத்தை உழுவதற்காக டிராக்டர் கொண்டு சென்று உழுதார்கள். ஆஜர் எதிரிகள் அந்த டிராக்டரை தடுத்து ஓட்ட கூடாது என சொல்லி அதன் சாவியை பிடிங்கி கல் எடுத்து டிராக்டர் மீது வீசினார்கள். எனக்கு எனது அண்ணன் மகன்கள் எனக்கு போன் மூலம் நேரிலும் வந்து தகவல் சொன்னார்கள். ஆஜர் எதிரியும் எங்களது நிலத்தை உழவு செய்யவிடாமல் தடுப்பதாக சொன்னதன் பேரில் நான் அந்த இடத்திற்கு சென்று முதல் எதரியிடம் சென்று எதற்காக ஏர் உழவு செய்ய விடாமல் தடுக்கிறாய், நாம் ஒன்றும் அண்ணன், தம்பியும் இல்லை நமக்குள் பாகப்பிரச்சனை ஏற்படவும் இல்லை என்று கேட்டேன். எனது பெரிய அண்ணன் என்னையும் எதிரிகளையும் சமதானப்படுத்தி ஊரில் பெரியவர்களை வைத்து பேசி கொள்ளலாம் என கூறி என்னை அழைத்து சென்று விட்டார். நான் ஐயங்கொல்லையிலே எனது அம்மா வீட்டில் தங்கி இருந்தேன். அன்றைய தினமே இரவ சுமார் 8 மணிக்கு ஆஜர் எதிரிகள் அடியாட்களை அழைத்து கொண்டு எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். என்னை பார்த்து உங்ககொத்தா, தேவிடியா பையா, பொட்ட பையா வெளியே வாடா என்று அசிங்கமான வார்த்தைகளால் அழைத்தார்கள். நான் சத்தம் கேட்டு வெளியில் எட்டி பார்த்தேன். அதற்குள் வீட்டிற்குள் வந்து தூக்கி கொண்டு வெளியே சென்று எனதுகை கால்களை பிடித்து தலை மீதும் கண்ணத்தின் மீதும் தாக்கினார்கள். என்னை 2ம் எதிரி, 3ம் எதிரி ஆகியோர்களுடன் வெளியில் வந்த சிலரும் என்னை வெளியே தூக்கி சென்றார்கள். என்னுடைய வலது தாடையின் மீது கட்டையால் தாக்கி ரத்த

காயம் ஏற்படுத்தினார்கள். எனக்கு பற்களுக்கு கீழ் உள்ள எலும்பில் முறிவு ஏற்பட்டு அதற்கு அறுவை சிகிச்சை செய்த பிளேட் பொறுத்தியிருக்கிறார்கள். எனது நிறைய ரத்தம் வழிந்தது. எனது அண்ணன் மகன் உதயகுமாரும், எனது அண்ணனும் சேர்ந்து திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்த்தார்கள். முதல் எதிரியின் மனைவி சிவகாமியும் சம்பவ இடத்திற்கு வந்திருந்தார். முருகன் கட்டையால் அடித்தார். சிவராஜ் செங்கல்லால் முதுகின் மீது அடித்தார். பிரபு, முருகேசன், சேர்ந்து மொத்தம் தெரிந்த நபர்கள் நான்கு பேரும் மற்றும் எனக்கு அடையாளம் தெரியாத முன்று பேரும் வந்தார்கள். மறுநாள் காலை போலீஸார் என்னை மருத்துவமனை வந்து விசரித்தார்கள். நடந்த விவரத்தை சொன்னேன. எழுதி கொண்டார்கள். அதில் நான் கைரேகை செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் சொன்னது தான். அநத புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ 1 ஆகும். எதிரிகள் சம்பவத்தின் போது என்னை அடிக்க பயன்படுத்திய கட்டை, கல்லை பார்த்தால் அடையாளம் சொல்ல முடியும். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் கட்டைகள் இரண்டும், செங்கல் துண்டும் எதிரிகள் என்னை அடிக்க பயன்படுத்தியதுதான். சுமார் 2 அடி நீளமுள்ள விறகு கட்டைகள் சா.பொ. 1 மற்றும் 2 ஆகும். செங்கல்துண்டு சா.பொ. 3 ஆகும். திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் எனக்கு முதலுதவி சிகிச்சை அளித்து மேல் சிகிச்சைக்காக சென்னை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். எனக்கு அங்கே ஸ்கேன் செய்து பார்த்து விட்டு அரசு பல் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கே எனக்கு அறுவை சிகிச்சை செய்து பிளேட் பொறுத்தி சிகிச்சை அளித்தார்கள். நான் சென்னையில் 15 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன். இது சம்மந்தமாக போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:- இல்லை.

நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி.சி 16/2018

2018ம் ஆண்டு ஜூலை திங்கள் 17ம் நாள் செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.2 வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ராஜா | வயது: | 31 |
| த/பெ.(அ)க.பெ: | வெள்ளைங்கிரி | தொழில்: | பானிபூரி |
| ஊர் | : ஆண்டியப்பனூார் | சமயம்: | இந்து |
| வட்டம் | : திருப்பத்தூர் | சாதி: | |
| மாவட்டம் | : வேலூர் | | |

முதல் விசாரணை:-

நான் ஆண்டியப்பனூார், ஐயங்கொல்லி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் தஞ்சாவூரில் பானி பூரி கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். அ.சா. 1 எனது சித்தப்பா. வழக்கின் எதிரிகளை தெரியும். அவர்கள் எனது பக்கத்து நிலத்துக்காரர். சுமார் 1 வருடம், இரண்டு மாதம் ஆகியிருக்கும் மாலை சுமார் 5 மணிக்கு எனது சித்தப்பா பாப்பண்ணன், எனது பாட்டி முனியம்மா ஆகியோர் டிராக்டரை எடுத்து சென்று நிலத்தில் ஏறு உழுதார்கள். வழக்கின் எதிரிகள் நிலத்திற்கு வந்து டிராக்டர் ஓட்ட விடாமல் தடுத்தார்கள். டிராக்டர் ஓட்டும் நபரை திருப்பி அனுப்பி விட்டார்கள். அந்த நிலம் அ.சா.1 க்கு பாத்தியப்பட்டது என்பதால் நாங்க்ள அவருக்கு தகவல் கொடுத்து எங்களுடைய நிலத்தை ஓட்டவிடாமல் தடுக்கிறார்கள் என்று சொல்லி அவருக்கு தகவல் சொன்னோம். அ.சா. 1 முதல் எதிரியிடம் சென்று ஏன் எனது நிலத்தை ஓட்ட விடாமல் தடுக்கிறாய் என்று கேட்டார் அப்போது நானும் உடன் இருந்தேன். அதன் பிறகு அ.சா.1 ஊர்காரர்களை வைத்து காலையில் பேசி கொள்வதாக சொல்லிவிட்டு வீட்டிற்கு வந்துவிட்டார். நானும் வந்து விட்டேன். அன்றைய தினமே இரவு 8 மணிக்கு 2, 3 ம் எதிரிகள் கட்டையை கொண்டு வந்து அ.சா.1 ஐ இழுத்து கட்டையால் தாக்கினார்கள். 4, 5 வெளியூர் நபர்களையம் அழைத்து வந்தார்கள். நான் எதிரிகள் மணி, சிவராஜ், முருகேசன் ஆகியோர்களிடம் வெளியூர்காரர்களை அழைத்து வந்து ஏன் அடிக்கிறீர்கள் என கேட்டேன். அப்போது 2ம் எதிரி ஒரு செங்கல்லால் எனது இடது கண் புருவத்தில் தாக்கினார். இடது புற தலையின் மீதும் செங்கல்லால் தாக்கினார். 3ம் எதிரி வலது தோள்பட்டையின் மீது கட்டையால்தாக்கினார். அ.சா. 1 ஐ தாக்கியதில் அவருக்கு ரத்தம் வழிந்தது. பற்கள் உடைந்து வெளியே வந்தது. அ.சா.1 ஐ உதயகுமாரும்,பெரியண்ணன் ஆகிய இருவரும் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு வந்து சேர்த்தார்கள். என்னையும் எனது மனைவி

திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சேர்த்தார். போலீஸார் என்னை மருத்தவமனையில் வந்து விசாரித்தார்கள். நான் மருத்துவமனையில் 5 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்தேன்.

எ.த.கு.வி:- இல்லை.

நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.

சி.சி 16/2018

2018ம் ஆண்டு ஜூலை திங்கள் 17ம் நாள் செவ்வாய்க்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா.3 வது நபரின் வாக்குமூலம், (1969ம் ஆண்டின் 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிராமணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | பாப்பண்ணன் | வயது: | 70 |
| த/பெ.(அ)க.பெ: | குப்புலு | தொழில்: | விவசாயம் |
| ஊர் | : ஐயங்கொல்லி | சமயம்: | இந்து |
| வட்டம் | : திருப்பத்தூர் | சாதி: | |
| மாவட்டம் | : வேலூர் | | |

முதல் விசாரணை:-

நான் ஐயங்கொல்லி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன்.நான் விவசாயம் செய்து வருகிறேன். அ.சா. 1எனது தம்பி. அ.சா.2 எனது அண்ணன் மகன். வழக்கின் எதிரிகளை தெரியும். சுமார் ஒரு ஆண்டிற்கு முன்பு மாலை சுமார் 5 மணிக்கு நானும், டிராக்டர் வைத்து அ.சா.1 ன் நிலத்தை ஏர் ஓட்டி கொண்டிருந்ததேன். முதல் எதிரியும், அவரது மனைவியும், என்னை அடிப்பதற்காக ஓடி வந்தார்கள். பருத்தி மண்டை குச்சிகளை நான் ஏர் ஓட்டி கொண்டிருந்த சமயத்தில் நிலத்தின் ஓரத்தில் போட்டு கொண்டிருந்தேன். டிராக்டரை ஓட்ட விடாமல் தடுத்தார்கள். டிராக்டரின் மீது கல்லை எடுத்து வீசினார்கள். அப்போது எதிரி முருகன் சாவியை பிடிங்கி கொண்டார். சாட்சி முருகன் என நீதிமன்றத்தில் ஆஜரான 2ம் எதிரி முருகேசன் என்பவரை அடையளாம் காட்டி குறிப்பிட்டார். டிராக்டர் ஓட்டிய நபர் நான் லட்சக்கணக்கில் பணம் போட்டு முதலீடு செய்துள்ளேன். அவர்கள் டிராக்டரை தாக்குகிறார்கள். எனவே என்னால் ஏர் ஓட்ட முடியாது என்று சொல்லி அங்கிருந்து கிளம்பி விட்டார். நான் அ.சா. 1 மகேந்திரனுக்கு தகவல் சொல்லி வரச்சொன்னேன். எனது அண்ணன் மகன் அ.சா.1 ஐ அழைத்துவந்தார். அ.சா.1 ஆஜர் எதிரியிடம் ஏதோ கேட்டு இருக்கிறார் அதன் பிறகு எனது அண்ணன் சமதானம் பேசி வீட்டிற்கு அழைத்து வந்துவிட்டார். அதன் பிறகு ஆஜர் எதிரிகள் வெளியில் இருந்து ஆட்களை அழைத்து வந்து வீட்டிலிருந்த அ.சா.1 ஐ கட்டையால் தாக்கினார்கள். அ.சா. 1க்கு தாடையில் எலும்பு உடைந்து விட்டது.அவர் சட்டை முழுவதும் ரத்தம் வழிந்தது. போலீஸார் என்னை விசாரித்தார்கள்.

எ.த.கு.வி:- இல்லை.